**வருகின்ற 2018-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 ம் தேதி புதன்கிழமை காலை 11.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் சாதாரண கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.**

1. பவானி நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீர் விநியோகம் செய்வதற்கு காவேரி ஆற்று நீர் சுத்திகரிப்பு செய்ய படிகாரம் (ALUM) 12.00 மெட்ரிக் டன் வாங்கி தலைமை நீரேற்று நிலையத்தில் இருப்பில் வைத்து பயன்படுத்தி கொள்ளவேண்டியுள்ளது. 2018-19-ஆம் நிதியாண்டிற்கு படிகாரம் கொள்முதல் செய்யவும், இதற்கு மேல் உத்தேச செலவினம் ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குடிநீர் நிதியின் கீழ் பணியை மேற்கொள்ளலாம்

2. பவானி நகராட்சி - ஈப்பு வாகனங்கள் பதிவு எண்.1. TN36 AY6791 & TN36 AY6793 இரண்டு ஈப்பு வாகனங்களின் டீசல் & ஆயில் மற்றும் வாகன பராமரிப்பு செலவினம் 2018-19 ஆம் நிதியாண்டிற்கான செலவினம் ரூ.7,00,000/- ஆகும் செலவினத்தினை நகராட்சி பொது நிதியில் ஓர் ஆண்டு காலத்திற்கு செலவினத்தை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: (ந.க.எண்.747/2017/இ1)

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அலுவலக பணியின் பயன்பாடு என்பதால் நகராட்சி பொது நிதியில் ஓர் ஆண்டு ( 2018-19) காலத்திற்கு செலவினம் செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3. பவானி நகராட்சியில் மூலதன மானிய நிதி 2018-19 திட்டத்தின் கீழ் குடிநீர் அபிவிருத்தி பணிகள் ரூ.150.00இலட்சத்திற்கும், மழையின் வடிகால் கட்டும் பணிகள் ரூ.100.00 இலட்சத்திற்கும் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளை தற்போது நகராட்சிகளில் நிதி பற்றாக்குறையாக உள்ளதால் அரசிடமிருந்து நிதி ஒதுக்கீடு கோரியமுன் மொழிவுடன் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

Details of work Proposed to be taken up under capital Grand Fund

| **S.No** | **Name of the work** | **Nos/Length** | **Amount in Lakhs** |
|---|---|---|---|
| | **I.Water Supply Improvement works** | | |
| 1 | Replacement of motors at Head works | 1No | 50.00 |
| 2 | Providing Flow control value in HSC Lines | 5000 Nos | 50.00 |
| 3 | Renovation of water Treatment plant | 1 No | 30.00 |
| 4 | Construction of Compound wall at Head work | 330m | 20.00 |
| | Sub Total | | 150.00 |
| | **II. Storm water drain** | | |
| 5. | Construction of Storm water drain | 2300m | 100.00 |

| | Grand Total | | 250.00 |
|---|---|---|---|

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.985/2015/இ1)

4. இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்களுக்கு ஓராண்டு மற்றும் மூன்றாண்டுகளுக்கு 2018-19 ஆண்டு முதல் குத்தகை உரிமம் அனுபவித்துக் கொள்ள 11 இனங்களுக்கு முதலில் 7.2.2018 - ல் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் கீழ்கண்ட இனங்களுக்கு மட்டும் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வி தொகையினை தனி அலுவலரின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகை இனம் | உயர்ந்த பட்ச ஏலக்கேள்வி கோரியவர் பெயர் மற்றும் ஏலத்தொகை | மூன்றாண்டு சராசரி | 2017-18 குத்தகை தொகை |
|---|---|---|---|---|
| 1 | <u>இனம்: 8</u> புதிய பேருந்து நிலைய கட்டணம் கழிப்பிடம் சுங்கம் வசூலிக்கும் உரிமம் | திரு.வி. மாரியப்பன் ரூ.2,52000/- | ரூ.200078/- | ரூ.209916/- |
| 2 | <u>இனம்: 10</u> புதிய மீன் அங்காடியில் சுங்கம் வசூலிக்கும் உரிமம் | திரு. ராஜசேகர் ரூ.15,00,000/- | ரூ.426113/- | ரூ.4,47063/- |
| 3 | <u>இனம்: 11</u> புதிய பேருந்து நிலையத்தில் ஒரு பூக்கடை வைத்துக் கொள்ளும் உரிமம் | திருமதி. ஜே. பாக்கியம் ரூ.50500/- | ரூ.41928/- | ரூ.43989/- |

மேற்கண்ட 3 இனங்களுக்கு கோரப்பட்ட உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி மூன்றாண்டு சராசரி மற்றும் சென்ற ஆண்டு குத்தகைத் தொகையை காட்டிலும் கூடுதலாக உள்ளது.

எனவே மேற்கண்ட குத்தகை இனங்களுக்கு 2018-19 முதல் 31.03.2021 வரை மூன்றாண்டுகளுக்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு குத்தகை உரிமம் வழங்குவது குறித்து தனி அலுவலர் முடிவு செய்யலாம்.

அரசு ஆணை எண். 181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.ம) துறை நாள்: 19.9.2008 ன் படி மேற்படி உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கோரிய குத்தகை இனங்களுக்கு குத்தகைத் தொகை மூன்றாண்டுகளுக்கு கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்து பட்டியலிடப்பட்டுள்ளது. இதன்படி உரிய காலக் கெடுவில் குத்தகை தொகையை செலுத்தி குத்தகை உரிமம் அனுவித்துக் கொள்வது குறித்து தனி அலுவலர் முடிவு செய்யலாம்.

| வ. எண் | குத்தகை இனம் | 2018-19-ம் ஆண்டு குத்தகை தொகை | 2019-20-ம் ஆண்டு குத்தகை தொகை | 2020-21-ம் ஆண்டு குத்தகை தொகை |
|---|---|---|---|---|
| 1 | <u>குத்தகை இனம்: 8</u> புதிய பேருந்து நிலைய கட்டணம் கழிப்பிடம் சுங்கம் வசூல் செய்யும் உரிமம் | ரூ.252000/- | ரூ.264600/- | ரூ.277830/- |
| 2 | <u>குத்தகை இனம்: 10</u> நுகராட்சிக்கு சொந்தமான புதிய மீன் அங்காடியில் சுங்கம் வசூலிக்கும் உரிமம் | ரூ.1500000 | ரூ.15,75000/- | ரூ.1653750/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | குத்தகை இனம்: 11<br>புதிய பேருந்து நிலையத்தில் ஒரு பூக்கடை வைத்துக் கொள்ளும் உரிமம் | ரூ.50500/- | ரூ.53025/- | ரூ.55676/- |

நிபந்தனைகள்:

1. மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை மேற்கண்ட இனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் பொது ஏலத்தில் விடப்படும்.

2. மூன்றாண்டு கால அளவு என்ற ஒரு தொகுப்பு கால அளவிற்குள் கட்டணம் வசூலிக்கும் குத்தகைதாரர் காலமானால் அவர்களின் வாரிசுதாரர்கள் குத்தகைதாரராக அவ்வினத்தை பெறவும் வாரிசு தரார்களுக்கு விருப்பமில்லை எனில் உரிமை மறு ஏலம் விடப்படும்.

3. வருமானவரி, தொழில்வரி ஆகியவற்றினை குத்தகைத் தொகையில் கழித்துக் கொள்ள இயலாது. இதனை உடன் செலுத்தப்பட வேண்டும்.

4. 2018-19-ம் ஆண்டு குத்தகை பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளை மீறி நடந்தால் குத்தகை உரிமம் முன் அறிவிப்பின்றி ரத்து செய்யப்படுவதுடன் அதனால் ஏற்படும் இழப்புகளுக்கு குத்தகைதாரர் பொறுப்பாவார்.

மேற்கண்ட நிபந்தனைகளுடன்உரிமம் வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதி வழங்கலாம் (ந.க.எண். 1707/2017/அ2)

5. இந்நகராட்சிக்கு சொந்தமான ஓராண்டு மற்றும் மூன்றாண்டுகளுக்கான குத்தகை இனங்களுக்கு 2018-19 ஆண்டு முதல் குத்தகை உரிமம் அனுபவித்துக் கொள்ள 8 இனங்களுக்கு மறு ஏலம் 21.02.2018 -ல் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் கீழ்கண்ட இனங்களுக்கு மட்டும் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் உயர்ந்த பட்ச ஏலம் /ஒப்பந்தப்புள்ளி தொகையினை தனி அலுவலரின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகை இனம் | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கோரியவர் பெயர் மற்றும் ஏலம் ஒப்பந்தப்புள்ளி தொகை | மூன்றாண்டு சராசரி | 2017-18 குத்தகை தொகை |
|---|---|---|---|---|
| 1 | இனம்: 1<br>தினசரி காய்கறி அங்காடி நுழைவு வாயில் சுங்கம் வசூல் செய்யும் உரிமம் | திரு. பி. செல்வம்<br>ரூ. 25,05,000/- | ரூ.2317087/- | ரூ.24,31,012/- |
| 2 | இனம்:12<br>சேல்லியாண்டியம்மன் அங்காடியில் கடைகளுக்கு பின்புறமுள்ள காலியிடத்தில் இரு சக்கர வாகனம் நிறுத்தி சுங்க கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | திரு. கே. முருகன்<br>ரூ.45000/- | ரூ.38355/- | ரூ.40241/- |

1. மேற்கண்ட 2 இனங்களுக்கு கோரப்பட்ட உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி மூன்றாண்டு சராசரி மற்றும் சென்ற ஆண்டு குத்தகைத் தொகையை காட்டிலும் கூடுதலாக உள்ளது. எனவே,

மேற்கண்ட குத்தகை இனங்களுக்கு 2018-19 முதல் 31.03.2021 வரை மூன்றாண்டுகளுக்கு கீழ்கண்ட நிபந்தணைகளுக்குட்பட்டு குத்தகை உரிமம் வழங்குவது குறித்து தனி அலுவலர் முடிவு செய்யலாம்.

2. அரசு ஆணை எண். 181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( ந.நி.4) துறை நாள்: 19.9.2008 ன்படி மேற்படி உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கோரிய குத்தகை இனங்களுக்கு குத்தகைத் தொகை மூன்றாண்டுகளுக்கு கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்து பட்டியலிடப்பட்டுள்ளது. இதன்படி உரிய காலகெடுவில் குத்தகை தொகையை செலுத்தி குத்தகை உரிமம் அனுபவித்துக் கொள்வது குறித்து தனி அலுவலர் முடிவு செய்யலாம்.

| வ. எண். | குத்தகை இனம் | 2018-19-ம் ஆண்டு குத்தகை தொகை | 2019-20-ம் ஆண்டு குத்தகை தொகை | 2020-21-ம் ஆண்டு குத்தகை தொகை |
|---|---|---|---|---|
| 1. | <u>இனம்:</u><br>தினசரி காய்கறி அங்காடி நுழைவு வாயில் சுங்கம் வசூல் செய்யும் உரிமம் | ரூ.25,05,000-/ | ரூ. 26,30,250/- | ரூ.2761,763/- |
| 2 | <u>இனம்:</u><br>செல்லியாண்டியம்மன் அங்காடியில் கடைகளுக்கு பின்புறமுள்ள காலியிடத்தில் இரு சக்கர வாகனம் நிறுத்தி சுங்க கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | ரூ. 45000/- | ரூ. 47250/- | ரூ. 49613/- |

நிபந்தணைகள்:

1. மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை மேற்கண்ட இனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் பொது ஏலத்தில் விடப்படும்.
2. மூன்றாண்டு கால அளவு என்ற ஒரு தொகுப்பு கால அளவிற்குள் கட்டணம் வசூலிக்கும் குத்தகைதாரர் காலமானால் அவர்களின் வாரிசுதாரர்கள் குத்தகைதாரராக அவ்வினத்தை பெறவும் வாரிசுதாரர்களுக்கு விருப்பமில்லை எனில் உரிமை மறு ஏலம் விடப்படும்.
3. வருமானவரி தொழில்வரி ஆகியவற்றினை குத்தகைத் தொகையில் கழித்துக் கொள்ள இயலாது. இதனை உடன் செலுத்தப்பட வேண்டும்.
4. 2018-19 ஆம் ஆண்டு குத்தகை பொது மற்றும் சிறப்பு நிபந்தணைகளை மீறி நடந்தால் குத்தகை உரிமம் முன் அறிவிப்பின்றி ரத்து செய்யப்படுவதுடன் அதனால் இழப்புகளுக்கு குத்தகை தாரர் பொறுப்பாவார்.

மேற்கண்ட நிபந்தனைகளுடன் உரிமம் வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதி வழங்கலாம் (ந.க.எண். 1707/2017/அ2)

6. இந்நகராட்சிக்கு சொந்தமான கடைகள் அந்தியூர் ரோட்டில் அமைந்துள்ள கடை எண். 2,3,4 ஆகிய 3 கடைகள் 28.2.2018-ல் 9 ஆண்டு குத்தகை காலம் முடிவடைவதால் மேற்படி கடைகளுக்கு அரசாணை எண். 92, நாள்: 03.07.2007 மற்றும் அரசு கடிதம் 6655/ந.நி. 4(2)/2009-01, நாள்: 12.03.2009 -இன் படி நகராட்சி கடைகள் மற்றும் நிலங்களுக்கு 9 ஆண்டு குத்தகை காலம் முடிவடைந்த பின்னர், மறுமதிப்பீடு செய்து அடுத்த 9 ஆண்டுகள் குத்தகை நீட்டிப்பு வழங்கலாம் எனவும் தெளிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி அங்காடி மதிப்பின்படி மேற்கண்ட அந்தியூர் ரோட்டில் அமைந்துள்ள 3 கடைகளுக்கும் கீழ்கண்டவாறு வாடகை 3 மடங்கு உயர்வு செய்து மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | கடைஎண் வரிவிதிப்பு எண். | அளவு | தற்போதைய வாடகை | மறுமதிப்பீடு செய்த வாடகை | வைப்புத் தொகை 12 மாதம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2<br>055/79007 | 8x16 | 2315 | 7000/- | 84000/- |
| 2 | 3<br>055/79008 | 8x16 | 2580 | 7000/- | 84000/- |
| 3 | 4<br>055/7900 | 8x16 | 2780 | 7000/- | 84000/- |

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.2331/2016/அ3)

7. இந்நகராட்சி, பொறியியல் பிரிவில் வளர்ச்சிப் பணிகளை ஒப்பந்தப்புள்ளி கோரி செயல்பட்டு வருகின்றது. திட்டப்பணிகளை இணையதளத்தில் VP load செய்து இணையதளம் மூலமாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகளை செய்து முடிக்க வேண்டியுள்ளது. இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளிகளை VP load செய்ய Digital Signature Certificate தேவைப்படுகிறது. எனவே DSC Card வாங்க ஆகும். உத்தேச செலவினம் ரூ. 3000/- ஆகும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.319/2018/இ1)

8. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 425/ 2018/ பி2, நாள்: 06.02.2018 ல் தெரிவித்துள்ளபடி தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோவை நிறுவனத்திற்கு 2017-18 ஆம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய ஆண்டு சந்தா ரூ.20000/- ஐ வங்கி வரைவோலையாக இயக்குநர் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயமுத்துார் என்ற முகவரிக்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: (ந.க.எண். 0292/2018/சி1)

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. செலவுத் தொகை ரூ.20000/-ஐ வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

9.TURIP 2016-17 திட்டம் (Phase-11) சிப்பம் 1-ன் கீழ் ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டதில் சாலைப் பணிகள் வழி வகுக்கப்பட்ட அனைத்தும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இதில் வார்டு எண்.13 சௌடேஸ்வரி அம்மன் கோவில் வீதியில் ஆக்கிரமிப்பு அகற்றியும், நிலஅளவை செய்யவும் வேண்டியுள்ளதால் தற்போது மழைநீர் வடிகால் பணி செய்ய இயலவில்லை. மேலும் வார்டு எண்.14 தேவராஜ் பிள்ளை சந்து பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிமெண்ட் கற்கள் சாலைப் பணி பொது மக்கள் ஆட்சேபணை செய்வதால் தற்போது பணிகள் செய்ய இயலவில்லை. மேற்கண்ட பணிகளை ஆக்கிரமிப்பு அகற்றியும், நிலஅளவை செய்தும், பொதுமக்களிடம் பேசியும் பின்னர் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தியுள்ளார். எனவே தற்போது ரூ.180.88 இலட்சத்தில் முடிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு மட்டும் பணிமுடிவுறு அறிக்கை தயார் செய்து தலைமை பொறியாளர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| Package No. | Name of Work | Estimate | Value of work done |
|---|---|---|---|
| Package 1 | Restoration of Roads and Construction of Storm water drain at work no: 1,2,3,4,5,6,7,8,9,10,13 &14 | 200.00 Lakhs | 180.88 Lakhs |

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 1290/2016/இ1)

10. TURIP 2016-17 திட்டம் (Phase-11) சிப்பம் 1-ன் கீழ் ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில் சிப்பம் 1 சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இதில் ரூ.180.88 இலட்சத்திற்கு பணிகள் செய்து முடிக்கப்பட்டது மற்றும் சிப்பம் IIல் ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்பட்டதில் ரூ.121.64 இலட்சத்திற்கு பணிகள் செய்து முடிக்கப்பட்டது. செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கு பணிமுடிவுறு அறிக்கை தலைமை பொறியாளர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| Package No. | Name of Work | Estimate | Value of work done |
|---|---|---|---|
| Package 1 | Restoration of Roads and Construction of Storm water drain at work no: 1,2,3,4,5,6,7,8,9,10,13 &14 | 200.00 Lakhs | 180.88 Lakhs |
| Package II | Restoration of Roads and Construction of Storm water drain at work no:2,11,17,18,19,20,21,22,23,24,&27 | 200.00 Lakhs | 121.64 Lakhs |

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 1290/2016/இ1)

11. TURIP 2016-17 (Phase-II) திட்டம் சிப்பம் II-ன் கீழ் ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்பட்டதில் சாலைப் பணிகள் வழி வகுக்கப்பட்ட அனைத்தும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இதில் வார்டு எண். 18 கல்தொழிலாளர் முதல் வீதி, வார்டு எண்.20 ஜோதி விநாயகர் கோவில் வீதி, வார்டு எண்.21 மாரியம்மன் கோவில் வீதி, வார்டு எண்.04 கோர்ட் தென்பகுதி சாலைகளில் ஆக்கிரமிப்பு அகற்றி, நிலஅளவை செய்ய வேண்டியுள்ளதால் தற்போது மழைநீர் வடிகால் பணி செய்ய இயலவில்லை. மேற்கண்ட பணிகளை ஆக்கிரமிப்புகள் அகற்றி, நிலஅளவை செய்து பின்னர் பொது நிதியிலிருந்து செய்ய மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கியுள்ளார். எனவே தற்போது ரூ.121.64 இலட்சத்தில் சிப்பம்-II-ல் முடிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு மட்டும் பணிமுடிவுறு அறிக்கை தயார் செய்து தலைமை பொறியாளர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| Package No. | Name of Work | Estimate | Value of work done |
|---|---|---|---|
| Package II | Restoration of Roads and Construction of Storm water drain at work no:2,11,17,18,19,20,21,22,23,24,&27 | 200.00 Lakhs | 121.64 Lakhs |

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் ( ந.க.எண். 1290/2016/இ1)

12. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் ந.க.எண். 413/2018/பி2, நாள்: 05.02.2018 கடிதத்தின்படி இந்திய செஞ்சிலுவை சங்கத்திற்கு பவானி நகராட்சியின் ஆண்டு சந்தாவாக ரூ. 2500/- ஐ பொது நிதியிலிருந்து செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் ( ந.க.எண். 57/2013/சி1)

13. இந்நகராட்சியின் 2017-2018 -ம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு திட்டமும், 2018-2019-ம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு திட்டமும் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் ஒப்புதல் வழங்கலாம் (ந.க.எண். 11/2017/பி1)

14. இந்நகராட்சி ஆணையாளர் மற்றும் பணியாளர்கள் 2018-2019 ஆம் ஆண்டில் அலுவலகப்பணி நிமித்தமாக வெளியூர் சென்று வர பயணப்படி உத்தேச செலவினம் வழங்கவும் ரூ.100000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் ( ந.க.எண். 292/2017/பி1)

15. இந்நகராட்சி அலுவலகப்பணியார்கள் 2018-19 ம் ஆண்டில் அலுவலகப்பணி நிமித்தமாக வெளியூர் சென்று வர பயணப்படி வழங்கவும் மற்றும் பணிமாறுதலில் வரும் பணியாளர்களுக்கு மாறுதல் பயணப்படி (TTA) வழங்கவும் உத்தேச செலவினம் ரூ. 25000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் ( ந.க.எண். 292/2017/பி1)

16.பவானி நகராட்சியில் பொது சுகாதாரபிரிவல் பணிபுரிந்து வரும் துப்புரவு பணியாளர்களுக்கு பணி பாதுகாப்புக்காக வழங்க வேண்டிய பாதுகாப்பு உபகரணங்களை ( Safety Equipments) தேவைக்கேற்ப 2018-19-ம் ஆண்டில் தேவைக்கு ஏற்ப வாங்கி கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 1,50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. ஒப்பந்தப்புள்ளி பெற்று பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கிக் கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் ( ந.க.எண். /2018/எச்1)

17. பவானி நகராட்சி பகுதிகளில் அவ்வப்போது பெரியமண் சாக்கடை தூர் வாருதல், முள்செடிகளை அப்புறப்படுத்துதல், ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணி உரக்கிடங்கில் வாகனங்கள் உள்ளே சென்றுவர இடையூராக இருக்கும் குப்பைகள் ஆகியவைகளை அப்புறப்படுத்தி வாகனங்கள் செல்ல ஏதுவாக பாதை அமைக்க JCB இயந்திரத்தை கொண்டு பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதால் 2018-19 -ம் ஆண்டில் அவ்வப்போது தேவைக்கேற்ப JCB வாகனத்தை பயன்படுத்தி பணி மேற்கொள்ளவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ. 2,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்

1. ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

( ந.க.எண். /2018/எச்1)

18 . பவானி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் மூலம் நகரின் சுகாதாரத்தை நல்ல முறையில் பராமரிக்க கிருமிநாசினம் செய்யப்படும் பணிக்கு 2018-19-ம் நிதி ஆண்டில் தேவைப்படும் நீர்த்த சுண்ணாம்புத்தூள், பினாயில் மற்றும் பிளிச்சிங் பவுடர் கிரேடு -II ஆகிய கிருமி நாசினிகளை மேற்படி நிதி ஆண்டில் தேவைக்கேற்ப வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி ( Annual Tender) வாயிலாக அவ்வப்போது வாங்கிக் கொள்ளவும் அதற்கு ஆகும் தோராய செலவினம் பின்வருமாறு

1. பிளிச்சிங் பவுடர் கிரேடு -II - 1,10,000
2. பினாயில் - 55,000
3. நீர்த்த சுண்ணாம்புத்தூள் - 1,32,000

மேற்கண்டுள்ள விபரப்படி செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

( ந.க.எண். 309/2017/எச்1)

19. பவானி நகராட்சிப் பகுதிகளில் உள்ள 27 வார்டுகளிலும் கொசுக்களால் பரவும் டெங்கு காய்ச்சல் உள்ளிட்ட தொற்றுநோய்கள் பரவாமல் தடுக்க நோய் தடுப்பு பணிகளை நல்ல முறையில் மேற்கொள்ள வீடுவீடாக சென்று கொசுப்புழு மருந்து தெளிப்பு பணி, கொசு உற்பத்தியாகும் இடங்களை அழித்தல் மற்றும் முதிர்ந்த கொசுக்களை கட்டுப்படுத்த புகை மருந்து தெளிக்கும் பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 2571/துமை/ 2017, நாள்: 14.02.217-ன் வாயிலாக தெரிவித்துள்ளார்கள். இப்பணிக்கு இந்நகராட்சிக்கென 35 Domestic Breeding Checkers பணியாளர்களை அயற்பணி ஒப்படைப்பு ( Outs sourcing Basis ) முறையில் ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தி பணிகளை மேற்கொள்ள வேண்டி உள்ளது.

இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை, சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 53646/VC2/S2/ 2016, நாள்: 09.08.2016-ன் படி DBC's பணியாளர் நபர்

| வ. எண் | விபரம் | தொகை(ரூபாயில்) |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1 | நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.200/- வீதம் 82 வேலை நாட்களுக்கு **200 X 82 X 35** | **5,74,000** |
| 2 | EPF **13.36 %** | **76,686** |
| 3 | ESI **4.75 %** | **27,265** |
| 4 | Reflected Jacket with Cap &.630 வீதம் 35 பணியாளர்களுக்கு | **22,050** |
| | | |
| | **TOTAL** | **7,00,001** |
| | **ROUNDED OFF** | **7,00,000** |

ஒருவருக்கும் நாள் ஒன்றுக்கு ரூ.200/- வீதம் கூலியாக வழங்கிட தெரிவித்துள்ளார்கள். மேற்படி 35 பணியாளர்களை 82 நாட்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி அயற்பணி ஒப்படைப்பு (( Outs sourcing Basis ) முறையில் பணி மேற்கொள்ள கீழ்காணும் முறையில் செலவினம் கணக்கிடப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணைகள் கடித ந.க.எண்: 1819/2016/எல்3, நாள்: 08.11.2016 ன் படி EPF and MP Act 1952-ற்கு இணங்கிட வேண்டும் என தெரிவித்துள்ளார்கள். எனவே, மேற்கண்டுள்ள விபரப்படி பணியாளர்களுக்கு EPF and MP Act 1952 ESI Act 1948- ன் படி மேற்கண்டவாறு செலவினம் கணக்கிடப்படுகிறது. எனவே, 16.04.2018 முதல் 82 வேலை நாட்களுக்கு மேற்காணும் செலவினத்தின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரி அயற்பணி ஒப்படைப்பு (Outsourcing Basis) முறையில் பணிமேற்கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:

1. நோய் தடுப்பு பணியின் அவசியம் கருதி நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண்.219/2017/எச்1)

20. பவானி நகராட்சியில் பொது சுகாதாரபிரிவில் துப்புரவுப்பணி மேற்கொள்ளும் துப்புரவு பணியாளர்களுக்கு 2018-2019-ம் ஆண்டிற்கு தேவையான தளவாடச்சாமான்களை வாங்கி வழங்கவும் அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,65,000/- ற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:

1. ஒப்பந்தப்புள்ளி பெற்று தளவாடச்சாமான்களை வாங்கிக் கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

21. பவானி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் மூலம் நகரின் சுகாதாரத்தை நல்ல முறையில் பராமரிக்க ஈக்களை கட்டுப்படுத்தும் பணிக்கு 2018-2019 ஆம் நிதி ஆண்டில் தேவைக்கு ஏற்ப ஈக்களை கட்டுப்படுத்தும் மருந்தான Dichlorvos 76% E.C மருந்தினை மேற்படி நிதி ஆண்டில் தேவைக்கேற்ப வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி (Annual Tender) வாயிலாக அவ்வப்போது வாங்கிக் கொள்ளவும் அதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.50,000/-ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-**

1. வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

22. இந்நகராட்சியில் நாய்களின் இனப்பெருக்கத்தினை கட்டுப்படுத்தும் திட்டமான ABC Program ன் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அனுமதியின்றி சுற்றித்திரியும் நாய்களைப்பிடித்து கருத்தடை அறுவைசிகிச்சை செய்யும் பணிக்கு 2018-2019-ஆம் ஆண்டில் தேவையின் அடிப்படையில் பணிமேற்கொள்ள ஆகும் உத்தேச செலவு ரூ.1,25,000/-த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

23. பவானி நகராட்சியில் பணிபுரிந்து வரும் சீருடை பெற தகுதியான பணியாளர்கள் அனைவருக்கும் 2018–2019–ம் ஆண்டிற்கு சீருடைகள் மற்றும் தையற் கூலி அரசாணை (நிலை)எண்:168 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை(பேரூ1) நாள்:16.11.2015-ன் படி அரசாணைப்படி வழங்க வேண்டியுள்ளது. சீருடைகளை அரசு நிறுவனமான ஈரோடு வசந்தம் கோ ஆப்டெக்ஸ் நிறுவனத்தாரிடமிருந்து வாங்கிக்கொள்ளவும், அதற்குண்டான தையல்கூலி வழங்கவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.2,25,000–ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

24. பவானி நகராட்சி பொதுசுகாதாரபிரிவின் பராமரிப்பில் உள்ள 4 லாரிகள் மற்றும் 1 ஆட்டோ (LCV), 1 நச்சுத்தொட்டி சுத்தம் செய்யும் வாகனம் ஆகமொத்தம் – 6 வாகனங்களுக்கு 2018-2019 ஆண்டில் பழுதுகளை சரிசெய்து தகுதிச்சான்று புதுப்பிக்கும்பணி சாலைவரி, பசுமைவரி, தகுதிச்சான்று புதுப்பித்தல் கட்டணம், சேவைக்கட்டணங்கள், புகை பரிசோதனை கட்டணம் மற்றும் காப்பீட்டு தொகை (Insurance) ஆகிய செலவினங்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1. | வாகனபழுதுகள் செப்பனிடுதல், பேட்டரி வாங்குதல் பசுமைவரி,தகுதிச்சான்றிதழ் புதுப்பித்தல், புகை பரிசோதனை கட்டணம், சேவைக்கட்டணம். | – | ரூ.3,00,000 |
| 2. | சாலைவரி செலுத்துதல் | – | ரூ. 50,000 |
| 3. | வாகனங்களுக்கான காப்பீட்டு தொகை (Insurance) | – | ரூ. 1,70,000 |
| | **மொத்தம்** | – | **ரூ.5,20,000** |

மேற்கண்டுள்ளவாறு 2018-2019 ஆண்டில் செலவினங்கள் மேற்கொள்வதற்கு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1) வாகன பழுதுகள் செப்பனிடுதல்,பேட்டரி கொள்முதல் செய்தல் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ள வேண்டி இருப்பின் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கும் நிறுவனத்தினரிடம் பணி மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2) இதர துறைக்கு செலுத்த வேண்டிய தொகையினை செலுத்தவும் தனிஅலுவலர் ஒப்புதல் அளிக்கலாம்.
3) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

25. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட குடியிருப்பு பகுதிகள் மற்றும் தெருக்களில் அனுமதியின்றி சுற்றித்திரியும் பன்றிகளால் பொது சுகாதார கேடு ஏற்படா வண்ணம் 2018-2019 ஆம் ஆண்டில் தேவையின் அடிப்படையில் பன்றிகளை உயிருடன் பிடித்து நகராட்சி எல்லைக்கு வெளியே அப்புறப் படுத்தும் பணிக்கு ஆகும் தோராய செலவினம் ரூ.2,50,000/- த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

26 . பவானி நகராட்சியில் பொது சுகாதாரபிரிவின் செயல்படுத்தப்படும் பணிகளுக்கு அரசு மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர் மற்றும் துணை இயக்குநர், பொதுசுகாதாரப்பணிகள் அவர்களின் மூலமாக அறிமுகப்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் செயல்முறைகள் ஆகியவைகளை பொது மக்களுக்கு கொண்டு செல்லவும், விழிப்புணர்வு ஏற்படுத்தவும் நகரில் அவ்வப்போது இதுசம்பந்தமான துண்டு பிரசுரங்கள் அச்சடித்து 2018–2019–ம் ஆண்டில்

தேவைக்கு ஏற்ப பொதுமக்களுக்கு விநியோகம் செய்யவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.40,000/-ற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலகக்குறிப்பு:—**

1. ஒப்பந்தப்புள்ளி பெற்று துண்டி பிரசுரங்கள் தயார் செய்ய மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்

27. பவானி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உள்ள வாகனங்கள், கொசு மருந்து தெளிக்கும் தெளிப்பான் மிஷின்கள், பூச்சிகளை கட்டுப்படுத்த பயன்படுத்தப்பட்டு வரும் பவர் ஸ்பிரேயர்கள் போன்றவற்றிற்கு 2018-2019-ம் நிதியாண்டில் தேவைக்கேற்ப பெட்ரோல், டீசல், ஆயில் மற்றும் கிரீஸ் போன்றவைகள் வாங்கி பயன்படுத்த வேண்டியுள்ளது.எனவே, மேற்குறிப்பிட்டுள்ளவைகளை இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேசன் நிறுவனத்தாரின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான M/s ஸ்ரீராம் ஏஜென்சி அவர்களிடமிருந்து வாங்கி பயன்படுத்தவும் அதற்கான ஆண்டு உத்தேச செலவினம் ரூ.6.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** அனுமதிக்கலாம்.

28. பவானி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் கொசுக்களை கட்டுப்படுத்த 2018-2019 ஆம் நிதி ஆண்டில் கொசுக்காளால் பரவும் நோய்களை கட்டுப்படுத்த, கொசுப்புழுக்கள் மற்றும் முதிர்ந்த கொசுக்களை அழிக்கும் பணிக்கு தெளிக்கப்பட பயன்படுத்தப்படும் Temephos Emulsifiable 50% EC, Bacillus Thuringiensis Var Israelensis Aqueous Suspension Serotype H14 மற்றும் Pyrethrum 2% Extract மற்றும் ஆகிய மருந்துகளை மேற்படி நிதியாண்டில் தேவைக்கேற்ப அவ்வப்போது தமிழ்நாடு மெடிக்கல் சர்வீஸ் கார்ப்பரேசன் லிமிடெட் நிறுவனத்தினரால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினரிடமிருந்து அங்கீகரிக்கப்பட்ட விலை விகிதத்தில் 2018-2019-ஆம் நிதி ஆண்டில் அவ்வப்போது தேவைக்கேற்ப வாங்கிப் பயன்படுத்தி கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.6,75,000/-ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-**

1. பொது சுகாதாரப்பிரிவின் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
2. Domestic Breading Checkers (DBC) பணியாளர்களை Outsourcing முறையில் ஈடுப்படுத்திட ஒப்பந்தப்புள்ளி வாயிலாக பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
3. செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

29. பவானி நகராட்சி வார்டு எண்: 24, 151, மக்கான் தெருவில் பவானி நகராட்சிக்கு சொந்தமான ஆடுவதை செய்யும் கூடம் (Slaughter House) இயங்கி வருகிறது. மேற்படி ஆடுவதை செய்யும் கூடத்திற்கு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், பெருந்துறை அவர்களின் Water (Prevention and control of Pollution)Act 1974 மற்றும் Air (Prevention and control of Pollution)Act 1981-ன் கீழ் ஆடுவதை செய்யும் கூடத்தினை இயக்குவதற்கான இசைவாணை (Consent to operate) 31.03.2018 தேதியுடன் முடிவடைகிறது. விதிமுறைகளின் படி ஆடுவதை செய்யும் கூடத்தினை தொடர்ந்து இயக்குவதற்கு உரிமத்தினை 01.04.2018 முதல் ஓராண்டிற்கு புதுப்பித்து இசைவாணை (Consent to operate) பெறுவதற்கு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், பெருந்துறை அவர்களுக்கு புதுப்பித்தல் கட்டணம் ரூ.6,000/-னை வங்கி வரைவோலையாக செலுத்தி உரிமத்தினை புதுப்பித்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

30.பவானி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 24, பழைய பஸ்நிலையம் ரோடு, மற்றும் பழைய பேருந்து நிலையம் OHT பின்புறம் உள்ள பகுதியில் செல்லக்கூடிய பழைய குடிநீர் பகிர்மான குழாய் மிகவும் பழுதுபட்டு அடிக்கடி அடைப்பு ஏற்படுவதனால் குடிநீர் சீராக வழங்க இயலவில்லை. எனவே புதியதாக குடிநீர் பகிர்மான குழாய் பதிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 25,000/- க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குடிநீர் நிதியிலிருந்து செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

31. பவானி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 8 அந்தியூர் மெயின் ரோடு, காடையாம்பட்டி வரை உள்ள பழைய குடிநீர் பகிர்மான குழாய் மிகவும் பழுதுபட்டுள்ளதனால் புதியதாக பகிர்மான குழாய் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 270000/- க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குடிநீர் நிதியிலிருந்து செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

32. பவானி நகராட்சி அம்மா உணவகத்திற்கு 2018-2019-ம் நிதியாண்டிற்கு தேவையான அரிசி, மளிகை, எரிவாயு உருளை காய்கறிகள் மற்றும் பணியாளர்கள் ஊதியம் ஆகிய செலவுகள் மேற்கொள்ள வேண்டி உத்தேச செலவுத்தொகைரூ. 30.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1. மன்றம் அனுமதிக்கலாம்

33. இந்நகராட்சிக்குட்பட்ட தலைமை நீரேற்று நிலையத்திற்கு எடுக்கப்படும் காவேரி ஆற்றின் நீர் மற்றும் பவானி நகராட்சிக்கு அமைந்துள்ள 5 எண்ணிக்கை குடிநீர் மேல்நிலைத் தொட்டிகளில் மாதம்தோறும் குடிநீர் மாதிரி எடுக்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், ஈரோடு அவர்களிடம் பரிசோதனை செலவினம் 2018-19 ஆம் நிதி ஆண்டின் உத்தேச செலவினம் ரூ. 1,00,000/-( ஒரு இலட்சம்) செலவு ஆகும். மேற்கண்ட செலவினம் ஓராண்டு காலத்திற்கு குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலககுறிப்பு:
1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குடிநீர் நிதியின் செலவினம் மேற்கொள்ளலாம் (ந.க.எண். 636/2017/இ1)

34.இந்நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2017-18 (Turip) கீழ் ரூ.70,00,000 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலை அமைத்தல் பணிகளுக்கு சம்பந்தமாக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தமிழ் நாளிதழ் மற்றும் ஆங்கில நாளிதழ் ஆகியவற்றில் விளம்பரம் செய்ய இயக்குநர் செய்தி மக்கள் தொடர்பு மற்றும் சுற்றுலா வளர்ச்சி துறை, தலைமை செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. மேற்படி நிறுவனம் வாயிலாக தமிழ் நாளிதழ் மற்றும் ஆங்கில நாளிதழ் ஆகியவற்றில் இந்நகராட்சியின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டு Golden advertising & Publicity Mylapore, Chennai-4 அவர்களிடம் இருந்து கீழ்க்கண்டுள்ளவாறு கேட்புப்பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | நாள் | தொகை | பட்டியல் எண். |
|---|---|---|---|
| 1. | 23.11.17 | ரூ.36,590 | பில்.எண்.69/2017-18 |

மேற்படி தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு
1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.வருவாய் நிதியின் கீழ் பட்டியல் தொகை வழங்கலாம்.

(கோப்பு எண்: 952/2017/இ1

35 . பவானி நகராட்சி - தலைமை நீரேற்ற நிலையத்தில்மின் தடை நேரங்களில் இயக்கப்படும் 100KVA ஜெனரேட்டர்கள் எரிபொருள்(டீசல்) உய்வு எண்ணெய் மற்றும் பராமரிப்பு செலவினம் 2018-2019ஆம் நிதியாண்டிற்கான உத்தேச செலவினம் ரூ.7,00,000/- ஆகும் மேற்கண்ட செலவினத்திற்கு நகராட்சி குடிநீர் நிதியில் ஓர் ஆண்டு காலத்திற்கு செலவினத்தை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1. மன்றம் அனுமதிக்கலாம்
2.பொது மக்களின் அத்தியாவசியம் தேவையான குடிநீர் விநியோகப் பணி என்பதால் செலவினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர்மன்றம் அனுமதிக்கலாம்.

**வருகின்ற 2018-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05-ம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.**

1. உறுப்பினர் செயலர், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் எல்லைகள் வரையறை ஆணையம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 3174/2017/இஜி1 நாள் 19.10.2017 நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் 23617/2016/எம்3 நாள் 23.10.2017 ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வுரை ந.க.எண் 23152/201/ப.அ4 நாள் 20.11.2017 நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1087/2016/அ3, நாள் 20.11.2017 ஆகியவற்றின்படி வார்டு எல்லைகள் வரையறை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நகர்மன்றத் தீர்மானம் எண்.718 நாள்:12.12.2017ன்படி அனுமதி பெற்று மறுவரையறை கருத்துருக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மறுவரையறை ஆணைய உத்தரவுகள் மற்றும் ஆய்வுக் கூட்ட அறிவுரைகளின்படி பெறப்பட்ட ஆட்சேபணை மனுக்களுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு கீழ்கண்டாவாறு திருத்திய மறுவரையறை செய்யப்பட்டுள்ளது.

பவானி நகராட்சி 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 39225 மக்கள் எண்ணிக்கையும் அதில் 86 தெருக்களை உள்ளடக்கிய 27 வார்டுகளையும் கொண்ட இரண்டாம் நிலை நகராட்சியாகும். இந்நகராட்சி மாவட்ட தலைநகரான ஈரோட்டிலிருந்து மேட்டூர் செல்லும் நெடுஞ்சாலையில் 16 வது கிலோ மீட்டரில் அமைந்துள்ளது. பவானி தாலுக்கா தலைமையிடமாகும். இந்நகராட்சியின் பரப்பளவு 2.17 சதுர கிலோ மீட்டர் ஆகும்.

இந்நகராட்சியில் புராதான முக்கியத்துவம் வாய்ந்த அருள்மிகு சங்கமேஸ்வரர் திருக்கோயில் அமைந்துள்ளது. மேலும் இந்நகரம் மற்றும் அருகில் உள்ள ஊராட்சிகளில் முக்கியத் தொழிலாக நெசவுத் தொழில் அமைந்துள்ளது. இங்கு உற்பத்தியாகும் படுக்கை விரிப்புகள் பிற மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

**பவானி நகராட்சி நில அமைப்பு பின்வருமாறு அமைந்துள்ளது.**

| | |
|---|---|
| வடக்கு | : ஆண்டிகுளம் மற்றும் ஊராட்சிக்கோட்டை |
| தெற்கு | : காவிரி மற்றும் பவானி ஆறு |
| மேற்கு | : பவானி ஆறு |
| கிழக்கு | : காவிரிஆறு |

பவானி நகராட்சியில் ஏற்கனவே உள்ள வார்டு எண். 1,2,3,4,5,6,9,10 உள்ள வார்டுகளில் சராசரி மக்கள் தொகையை காட்டிலும் அதிகமாக இருந்ததால், 12,13,14,19,20,21,22,23,24,25,26,27 வார்டுகளில் சராசரி மக்கள் தொகையை காட்டிலும் குறைவாக இருந்ததையும் கணக்கிட்டு ஏற்கனவே உள்ள 1,2 ஆகிய வார்டுகளாக தலா இரண்டாக பிரித்தும்

மற்ற வார்டுகளில் அருகில் உள்ள தெருவை இணைத்து புதியதாக 1 முதல் 27 வார்டுகள் மறு வரையறை செய்யப்பட்டது.

வார்டு எண்.11, 19 மற்றும் 25-ன் எல்லையின் நான்கு புறங்களிலும் உள்ள தெருக்களின் எல்லை முடிவுற்றதால் மக்கள் தொகை 10 சதவீதத்திற்கு குறைவாக உள்ளது.

வார்டு எண்: 12 மற்றும் 13 மேற்கில் பவானி ஆறு பகுதியில் குடியிருப்போரை கணக்கில் எடுத்து கொண்டதால் சராசரி மக்கள் தொகை விகிதாசாரத்தில் 10% மேல் உள்ளது.

மேலும் வார்டு எண்: 03 மற்றும் 17ல் ஆட்சேபணை மனுக்களின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு நிர்வாக நலன் கருதியும் பொதுமக்கள் நலன்கருதியும் வார்டு மறுவரையறை செய்யப்பட்டதால் சராசரி மக்கள் தொகை விகித்தாசாரத்தில் முறையே 18.5சதவீதம், 14.2சதவீதம் குறைவு ஏற்பட்டுள்ளது.

வார்டு எண்: 04, 16 மற்றும் 21ல் ஆட்சேபணை மனுக்களின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு நிர்வாக நலன் கருதியும் பொதுமக்கள் நலன்கருதியும் வார்டு மறுவரையறை செய்யப்பட்டதால் சராசரி மக்கள் தொகை விகித்தாசாரத்தில் முறையே 18 சதவீதம், 29.4சதவீதம், 10.1சதவீதம் அதிகம் ஏற்பட்டுள்ளது.

இந்நகராட்சியின் 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி பின்வருமாறு மக்கள் எண்ணிக்கை கணக்கிடப்பட்டள்ளது.

| | | |
|---|---|---|
| மொத்த மக்கள் தொகை | - | 39225 |
| ஆண்கள் | - | 19559 |
| பெண்கள் | - | 19666 |
| தாழ்த்தப்பட்ட இனத்தவர் மொத்தம் | - | 3291 |
| ஆண்கள் | - | 1619 |
| பெண்கள் | - | 1672 |

இந்நகராட்சி பகுதியில் அடங்கிய 1 முதல் 27 வரையிலான வார்டுகளில் களப்பணி செய்யப்பட்டு பின்வரும் வழிகாட்டி நெறிமுறைகளின்படி பிரேரணை தயார் செய்யப்பட்டுள்ளது.

1. 31.03.2017 சொத்துவரிக் கேட்பு பதிவேட்டின்படி வீடுகளின் எண்ணிக்கை கணக்கிடப்பட்டுள்ளது.
2. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் மொத்த வீடுகளின் விகிதாசார அடிப்படையில் வார்டுகள் பிரிக்கப்பட்டுள்ளது.
3. தமிழ்நாடு வார்டு எல்லை வரையறை ஆணைய அறிவிப்பு ஆணை எண். 288 நாள்: 12.09.2017 பிரிவு 5 ( அ) ன்படி ஏற்கனவே உள்ள 27 வார்டுகளே உள்ளது. தற்போதைய எல்லை வரையில் வார்டுகளின் எண்ணிக்கையில் மாற்றம் ஏதும் செய்யப்படவில்லை.
4. ஒவ்வொரு வார்டிலும் 10 சதவீதத்திற்கு கூடுதலாகவும், குறைவாகவும் மட்டுமே உள்ளது.
5. வடமேற்கிலிருந்து தொடங்கி தென்கிழக்காக முடியும் வண்ணம் வார்டுகளுக்கு எண்ணிடப்பட்டுள்ளது.

இந்நகராட்சியில் இதற்கு முன்னர் வார்டு எல்லைக்குள் வரையறை செய்யப்பட்ட 1966 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட வார்டு எண்களோடு தற்போது ( ஜிக் ஜாக் முறைப்படி) தயார் செய்யப்பட்ட எல்லை வரையறையின்படி வார்டு எண்கள் பின்வருமாறு ஒப்பு நோக்கப்படுகிறது.

1. வடமேற்கிலிருந்து தொடங்கி தென்கிழக்காக முடியும் வண்ணம் வார்டுகளுக்கு எண்ணிடப்பட்டுள்ளது.

இந்நகராட்சியில் இதற்கு முன்னர் வார்டு எல்லைகள் வரையறை செய்யப்பட்ட **1996**ம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட வார்டு எண்களோடு தற்போது (ஜிக் ஜாக் முறைப்படி) தயார் செய்யப்பட்ட எல்லை வரையறையின்படி வார்டு எண்கள் பின்வருமாறு ஒப்புநோக்கப்படுகிறது.

| வ. எண் | 1996ம் ஆண்டு வார்டு எல்லை வரையறைப்படி நிர்ணயிக்கப் பட்ட வார்டு எண் | 2017ம் ஆண்டு வார்டு எல்லை வரையறைப்படி நிர்ணயிக்கப் பட்ட வார்டு எண் | 1996ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட தெருக்களிலிருந்து 2017ம் ஆண்டு எல்லை வரையறைக்கு சேர்க்கப்பட்ட/ நீக்கம் செய்யப்பட்ட தெருக்களின் விபரம் | தமிழ்நாடு வார்டு எல்லை வரையறை ஆணைய விதிகளின்படி வார்டுகளுக்கு எண்ணிடப்பட்டதன்படி ஏற்படுத்தப்பட்ட மாறுதல் விபரம் |
|---|---|---|---|---|
| 1 | 1 | 1. 6 | முந்தைய வார்டு எண்.1, இரண்டாக பிரிக்கப்பட்டு புதிய வார்டு எண்.6ல் முந்தைய வார்டு எண்.6–லிருந்து மீனாட்சி கல்யாணமண்டபம் ரோடு பகுதி சேர்க்கப்பட்டுள்ளது. முந்தைய வார்டு எண்.7 திருவள்ளுவர்நகர் பகுதி நீக்கம் செய்யப்பட்டு புதிய வார்டு எண் 1ல் சேர்க்கப்பட்டுளள்து, | வார்டு எண் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. |
| 2 | 2 | 2 . 3 | முந்தைய வார்டு எண்.2, இரண்டாக பிரிக்கப்பட்டு புதிய வார்டு எண்.2ல் முந்தைய வார்டு எண்.3–லிருந்து வர்ணபுரம் 5வது ரோடு (அண்ணாநகர்) பகுதி சேர்க்கப்பட்டுள்ளது. | வார்டு எண் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. |
| 3 | 3 | 5 | முந்தைய வார்டு எண்.3–லிருந்து வர்ணபுரம் 5வது ரோடு (அண்ணாநகர்) ஒரு பகுதி புதிய வார்டு எண்.2ல் சேர்க்கப் பட்டுள்ளது. | வார்டு எண் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. |
| 4 | 4 | 4 . 11 | முந்தைய வார்டு எண்.3–லிருந்து வர்ணபுரம் 5வது ரோடு (அண்ணாநகர்) பகுதி மற்றும் காமராஜ் நகர் பெருமாள்புரம் புதிய வார்டு எண்.4ல் சேர்க்கப்பட்டு உள்ளது பழைய வார்டு எண்.6ல் இருந்து வர்ணபுரம் 5வது ரோடு பகுதி சேர்க்கப்பட்டுள்ளது. முந்தைய வார்டு எண்.4 வர்ணபுரம் 3வது வீதி, மற்றும் வர்ணபுரம் 4வது வீதி நீக்கப்பட்டு தற்போது புதிய உருவாக்கபட்டுள்ள வார்டு எண்.11ல் சேர்க்கப்பட்டுள்ளது. | வார்டு எண் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. |
| 5 | 5 | 10 . 11 | முந்தைய வார்டு எண்.5 வர்ணபுரம் 2வது வீதி நீக்கப்பட்டு தற்போது புதிய உருவாக்கபட்டுள்ள வார்டு எண்.11ல் சேர்க்கப்பட்டுள்ளது. | வார்டு எண் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. |
| | 6 | 9 | இவ்வார்டில் உள்ள மீனாட்சி | வார்டு எண் மாற்றம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | | | கல்யாணமண்டபம் ரோடு பகுதி புதிய வார்டு எண் 6–ல் சேர்க்கப் பட்டுள்ளது. பழைய வார்டு எண்.6ல் இருந்து வர்ணபுரம் 5வது ரோடு பகுதி நீக்கம் செய்யப்பட்டு புதிய வார்டு எண்4ல் சேர்க்கப்பட்டுள்ளது. | செய்யப்பட்டுள்ளது. |
| 7 | 7 | 7 | முந்தைய வார்டு எண்.7 திருவள்ளுவர்நகர் பகுதி நீக்கம் செய்யப்பட்டு புதிய வார்டு எண் 1ல் சேர்க்கப்பட்டுளள்து. | வார்டு எண் மாற்றம் இல்லை |
| 8 | 8 | 8 | மாற்றம் ஏதும்மில்லை. | வார்டு எண் மாற்றம் இல்லை |
| 9 | 9 | 13 | மாற்றம் ஏதும்மில்லை | வார்டு எண் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. |
| 10 | 10 | 14 | மாற்றம் ஏதும்மில்லை | வார்டு எண் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. |
| 11 | 11 | 12 | மாற்றம் ஏதும்மில்லை | வார்டு எண் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. |
| 12 | 12 | 15 | முந்தைய வார்டு எண். 13ல் உள்ள வாரச்சந்தை ரோடு மற்றும் முந்தைய வார்டு எண் 14–ல் உள்ள மெயின்ரோடு சேர்க்கப்பட்டுள்ளது. | வார்டு எண் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. |
| 13 | 13 | 20 | முந்தைய வார்டு எண் 13 ல் உள்ள வாரச்சந்தை ரோடு மற்றும் காவேரி வீதி நீக்கம் செய்யப்பட்டு முந்தைய வார்டு எண் 22–ல் உள்ள பசுவேஸ்வரர் வீதி சேர்க்கப்பட்டுள்ளது, | வார்டு எண் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. |
| 14 | 14 | 16 | முந்யை வார்டு எண் 15, மண்தொழிலாளர் 3வது ரோடு பகுதி சேர்க்கப்பட்டுள்ளது. | வார்டு எண் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. |
| 15 | 15 | - | முந்தைய வார்டு எண் 15–ல் உள்ள தெருக்கள் புதிய வார்டு எண் 16 மற்றும் 17 ல் சேர்க்கப்பட்டுளளது. | வார்டு எண் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. |
| 16 | 16 | 17 | முந்தைய வார்டு எண் 15–ல் உள்ள மண்தொழிலாளர் 3வது ரோடு பகுதி சேர்க்கப்பட்டுள்ளது. | வார்டு எண் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. |
| 17 | 17 | 18 | மாற்றம் ஏதும்மில்லை | வார்டு எண் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 18 | 18 | 24 | மாற்றம் ஏதும்மில்லை | வார்டு எண் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. |
| 19 | 19 | 25 | மாற்றம் ஏதும்மில்லை | வார்டு எண் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. |
| 20 | 20 | 23 | முந்தைய வார்டு எண் 21–ல் பழனியாண்டவர் கோவில் சந்து, மாரியம்மன் கோவில் வீதி சேர்க்கப்பட்டுள்ளது . | வார்டு எண் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. |
| 21 | 21 | 19 | முந்தைய வார்டு எண் 13,காவேரி வீதி மற்றும் முந்தைய வார்டு எண்.22 காவேரி வீதி மற்றும் பஜனைகோவில் வீதி சேர்க்கப்பட்டுள்ளது | வார்டு எண் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. |
| 22 | 22 | -- | இவ்வார்டி உள்ள தெருக்கள் வார்டு எண் 19 மற்றும் 20 ல் சேர்க்கப்பட்டுள்ளது | வார்டு எண் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. |
| 23 | 23 | 21 | முந்தைய வார்டு எண் 26 ல் உள்ள கீரைக்காரர் வீதி மற்றும் மெயின் ரோடு சேர்க்கப்பட்டுள்ளது | வார்டு எண் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. |
| 24 | 24 | 22 | முந்தைய வார்டு எண் 26 –ல் உள்ள பஸ் ஸ்டேண்டு ரோடு சேர்க்கப்பட்டு உள்ளது | வார்டு எண் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. |
| 25 | 25 | 26 | முந்தைய வார்டு எண் 24 –ல் உள்ள பழைய பஞ்சாயத்து ஆபிஸ் ரோடு சேர்க்கப்பட்டுள்ளது | வார்டு எண் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. |
| 26 | 26 | - | முந்தைய வார்டு எண் 26 –ல் உள்ள தெருக்கள் பிரிக்கப்பட்டு புதிய வார்டு எண் 21,22 மற்றும் 27 ல் சேர்க்கப்பட்டுள்ளது | வார்டு எண் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. |
| 27 | 27 | 27 | முந்தைய வார்டு எண் 26 –ல் உள்ள பாலக்கரை வீதி , பூக்கடை வீதி சேர்க்கப்பட்டுள்ளது | வார்டு எண் மாற்றம் இல்லை |

தற்போதய வார்டு எல்லை வரையறைப்படி தயார் செய்யப்பட்ட வார்டுகளில் வார்டு எல்லை வரையறை ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட மக்கள் எண்ணிக்கை விகிதாச்சார அளவுகோளுக்குட்பட்டு கீழ்க்காணும் விபரப்படியான வார்டுகள் அமைந்துள்ளது.

| வரிசை எண் | வார்டு எண் | ஒரு வார்டில் இருக்க வேண்டிய சராசரி மக்கள்தொகை | தற்போது களப்பணி செய்து கண்டறியப்பட்ட மக்கள்தொகை | கூடுதலாக/ குறைவாக உள்ள மக்கள் தொகை | வித்யாச சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | 1453 | 1437 | 16குறைவு | –1.1 |
| 2 | 2 | 1453 | 1337 | 116 குறைவு | –8.0 |
| 3 | 3 | 1453 | 1184 | 268 குறைவு | –18.5 |
| 4 | 4 | 1453 | 1714 | 261கூடுதல் | 18.0 |
| 5 | 5 | 1453 | 1505 | 53 கூடுதல் | 3.6 |
| 6 | 6 | 1453 | 1346 | 106குறைவு | –7.3 |
| 7 | 7 | 1453 | 1353 | 100 குறைவு | –6.9 |
| 8 | 8 | 1453 | 1593 | 140 கூடுதல் | 9.6 |
| 9 | 9 | 1453 | 1571 | 118 கூடுதல் | 8.1 |
| 10 | 10 | 1453 | 1387 | 66குறைவு | –4.5 |
| 11 | 11 | 1453 | 1306 | 147குறைவு | –10.1 |
| 12 | 12 | 1453 | 1605 | 152 கூடுதல் | 10.5 |
| 13 | 13 | 1453 | 1602 | 149 கூடுதல் | 10.3 |
| 14 | 14 | 1453 | 1552 | 99 கூடுதல் | 6.8 |
| 15 | 15 | 1453 | 1456 | 3 கூடுதல் | 0.2 |
| 16 | 16 | 1453 | 1879 | 427 கூடுதல் | 29.4 |
| 17 | 17 | 1453 | 1247 | 206 குறைவு | –14.2 |
| 18 | 18 | 1453 | 1509 | 56 கூடுதல் | 3.8 |
| 19 | 19 | 1453 | 1306 | 147குறைவு | –10.1 |
| 20 | 20 | 1453 | 1350 | 103குறைவு | –7.1 |
| 21 | 21 | 1453 | 1599 | 146 கூடுதல் | 10.1 |
| 22 | 22 | 1453 | 1309 | 144 குறைவு | –9.9 |
| 23 | 23 | 1453 | 1362 | 91குறைவு | –6.2 |
| 24 | 24 | 1453 | 1434 | 19குறைவு | –1.3 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 25 | 25 | 1453 | 1303 | 150குறைவு | –10.3 |
| 26 | 26 | 1453 | 1412 | 41குறைவு | –2.8 |
| 27 | 27 | 1453 | 1568 | 115 கூடுதல் | 7.9 |

கீழ்காணும் விபரப்படியான வார்டுகளில் சராசரிக்கும் கூடுதலாகவும் /குறைவாகவும் உள்ள மக்கள்தொகை கண்டறியப்பட்டுள்ளது .

| வரிசை எண் | வார்டு எண் | ஒரு வார்டில் இருக்க வேண்டிய சராசரி மக்கள் தொகை | தற்போது களப்பணி செய்து கண்டறியப்பட்ட மக்கள் தொகை | கூடுதல்/குறைவாக உள்ள மக்கள் தொகை | வித்யாச சதவீதம் | காரணம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 03 | 1453 | 1184 | 268 குறைவு | 18.5 | நிர்வாக நலன் கருதியும் பொது மக்கள் நலன் கருதியும் ஆட்சேபணை மனுக்களை பரிசீலனை செய்து மறுவரையறை செய்யப்பட்டுள்ளது. |
| 2 | 04 | 1453 | 1714 | 261 கூடுதல் | 18.0 | நிர்வாக நலன் கருதியும் பொது மக்கள் நலன் கருதியும் ஆட்சேபணை மனுக்களை பரிசீலனை செய்து மறுவரையறை செய்யப்பட்டுள்ளது. |
| 3 | 11 | 1453 | 1306 | 147குறைவு | 10.1 | இவ்வார்டில் உள்ள தெருக்களின் எல்லை முடிவுற்றதினால் 0.1 குறைவாக உள்ளது |
| 4 | 12 | 1453 | 1605 | 152 கூடுதல் | 10.5 | இவ்வார்டின் எல்லையைச்சுற்றி நான்கு புறங்களிலும் பிற வார்டுகளின் மக்கள்தொகை 10 சதவீதத்திற்கு உட்பட்ட இருப்பதால் இவ்வார்டில் மக்கள் தொகை 0.5 அதிகமாக உள்ளது. |
| 5 | 13 | 1453 | 1602 | 149 கூடுதல் | 10.3 | இவ்வார்டு மேற்புற எல்லை பவானி ஆற்றில் அமைந்துள்ளதால் அப்பகுதியில் உள்ள குடியிருப்புகளை சேர்க்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. |
| 6 | 16 | 1453 | 1879 | 427 கூடுதல் | 29.4 | நிர்வாக நலன் கருதியும் பொது மக்கள் நலன் கருதியும் ஆட்சேபணை மனுக்களை பரிசீலனை செய்து மறுவரையறை செய்யப்பட்டுள்ளது. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7 | 17 | 1453 | 1247 | 206 குறைவு | 14.2 | நிர்வாக நலன் கருதியும் பொது மக்கள் நலன் கருதியும் ஆட்சேபணை மனுக்களை பரிசீலனை செய்து மறுவரையறை செய்யப்பட்டுள்ளது. |
| 8 | 19 | 1453 | 1306 | 147 குறைவு | 10.1 | இவ்வார்டில் உள்ள தெருக்களின் எல்லை முடிவுற்றதினால் 0.1 குறைவாக உள்ளது |
| 9 | 21 | 1453 | 1599 | 146 கூடுதல் | 10.1 | நிர்வாக நலன் கருதியும் பொது மக்கள் நலன் கருதியும் ஆட்சேபணை மனுக்களை பரிசீலனை செய்து மறுவரையறை செய்யப்பட்டுள்ளது. |
| 10 | 25 | 1453 | 1303 | 150குறைவு | 10.3 | இவ்வார்டில் உள்ள தெருக்களின் எல்லை முடிவுற்றதினால் 0.3 குறைவாக உள்ளது |

எனவே மேற்கண்ட விபரப்படி பவானி நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 27 வரையிலான வார்டுகளின் எல்லை மறுவரையறை செய்யப்பட்டுள்ளதை மறுவரையறை ஆணையர் அவர்களின் அனுமதி பெற திருத்திய பிரேரணை சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு:**</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

2. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.38038/2013/UPA2, நாள்:31.01.2018-ன் படி 26.12.2017 -ல் நடைபெற்ற நான்காவது திட்ட அனுமதிக்குழு கூட்டத்தில் தீனதயாள் அந்தியோதயா யோஜனா திட்டத்தின் கீழ் ( DAY NULM) பவானி நகராட்சி பகுதியில் அமைந்துள்ள அரசு மருத்துவமனை வளாகத்திற்குள் வெளிப்புற நோயாளிகள் உறவினர்கள் தங்குவதற்கான அறை ( Special Shelter) கட்டுவதற்காக ரூ. 49.00 இலட்சமும், வருடாந்திர பராமரிப்புக்காக ரூ.4.68 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்தவும், தொடர்ந்து பணிகளை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு
1.மன்றம் அனுமதிக்கலாம்.

3. . பவானி நகராட்சி தெருவிளக்குகளில் மின்சாரம் சேமிக்கும் பொருட்டு அரசு கொள்கை முடிவின் அடிப்படையில், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித எண்.36321/2011/இ1, நாள்: 20.02.2012-ன் படியும் நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு ஆணை எண்.88 நாள்: 22.09.2012-ன் படியும் ரூ.1,49,52,165/- மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இதில் 50% அரசு மான்யம் (ரூ.74,76,000/-) பெறப்பட்டு செலவிடப்பட்டுள்ளது. மின்சேமிப்பு நிறுவனங்களுக்கு மீதம் வழங்க வேண்டிய நகராட்சி பங்களிப்பான 50% தொகை ரூ.74,76,000/- நகராட்சி நிதியில் இருந்து 4 ஆண்டில் ஆண்டு ஒன்றுக்கு 12.50% தொகையினை 8% வட்டியுடன் Esco ஒப்பந்தப்படி M/s சால்ஜர் எலக்ட்ரானிக்ஸ், M/s, எனர்ஜி எக்யூப்மென்ட்ஸ், கோவை நிறுவனங்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு
1.மன்றம் அனுமதிக்கலாம்.

மன்றப்பொருள்

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 1609/ 2014/ அ3, நாள்: 24.10.2018 ல் தெரிவித்துள்ளபடி தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோவை நிறுவனத்திற்கு 2018-19 ஆம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய ஆண்டு சந்தா ரூ.20000/- ஐ வங்கி வரைவோலையாக இயக்குநர் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயமுத்தூர் என்ற முகவரிக்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. செலவுத் தொகை ரூ.20000/-ஐ வருவாய் நிதியில் இருந்து
மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 0292/2018/சி1)